**செய்தி வெளியீடு எண்: 397** **நாள்: 21.06.2018**

**செய்தி வெளியீடு**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 20.6.2018 அன்று தலைமைச் செயலகத்தில், நாகப்பட்டினம் மாவட்டம், பனங்குடி கிராமம், முட்டம் பகுதியில் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்திற்கான நிர்வாகக் கட்டடத்தை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாகத் திறந்து வைத்தார்கள். மேலும், 6 கோடியே 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள விடுதியுடன் கூடிய மீன்வளர்ப்பு தொழில் முனைவோருக்கான கல்வி மற்றும் பயிற்சி நிலையம் மற்றும் நீர்த்தர சோதனை ஆய்வகக்கூடம், 38 கோடியே 81 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பால்வளத்துறை அலுவலக வளாகம் மற்றும் 3 அதிநவீன ஆவின் பாலகங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த 13.9.2011 அன்று சட்டப்பேரவை விதி எண் 110 கீழ் வெளியிட்ட அறிவிப்பில், தமிழ்நாட்டில் மீன்வளத்தைப் பெருக்குவதில் பல்வேறு முன்னோடி நடவடிக்கைகளை எடுத்து வரும் அதேவேளையில், அதற்குத் தேவையான கல்வி அறிவைப் பெருக்குவதற்கும் உரிய முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்ற அடிப்படையில், மீன்வளத்திற்கென, ‘‘மீன்வளப் பல்கலைக்கழகம்’’ ஒன்றை நிறுவ எனது தலைமையிலான அரசு முடிவு செய்துள்ளது. நாகப்பட்டினம் தாலுகாவில் பனங்குடியில் மீன்வளப் பல்கலைக்கழகம் அமைக்கப்படும் என்று அறிவித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, இப்புதிய மீன்வளப் பல்கலைக்கழகம் நாகப்பட்டினம் முதல் கடற்கரைச் சாலையில், 2012ஆம் ஆண்டு முதல் தற்காலிகமாக இயங்கி வருகிறது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த 15.7.2015 அன்று நாகப்பட்டினத்தில் கட்டப்படவுள்ள இப்புதிய மீன்வளப் பல்கலைக்கழகத்திற்கான நிர்வாகக் கட்டடத்திற்கு அடிக்கல் நாட்டினார்கள்.

நாகப்பட்டினத்தில் 20.9.2017 அன்று நடைபெற்ற புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். நூற்றாண்டு விழாவில், நாகப்பட்டினம் மீன்வளப் பல்கலைக்கழகத்திற்கு, மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மாவின் பெயர் சூட்டப்படும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் அறிவித்தார்கள். அதன்படி, மீன்வளப் பல்கலைக்கழகத்திற்கு ‘‘தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்’’ என்று பெயர் மாற்றம் செய்யப்பட்டு 16.2.2018 அன்று அரசாணை வெளியிடப்பட்டது.

நாகப்பட்டினம் மாவட்டம், பனங்குடி கிராமம், முட்டம் பகுதியில் 36,000 சதுரஅடியில் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழக நிர்வாகக் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக திறந்து வைத்தார்கள்.

இப்பல்கலைக்கழக நிர்வாகக் கட்டடத்தில், துணைவேந்தர், பதிவாளர், ஆராய்ச்சி இயக்குநர், விரிவாக்க கல்வி இயக்குநர், தேர்வு கட்டுப்பாட்டு அலுவலர், நிதி அலுவலர், உடைமை அலுவலர் ஆகிய அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கான அலுவலகக் கட்டடங்கள், நிர்வாக வரவேற்புக்கூடம், கருத்தரங்குக்கூடம், ஆவணக் காப்பகம், பல்கலைக்கழக நூலகம், மதிப்பூட்டிய மீன் உபபொருட்கள் விற்பனைக்கூடம், அருங்காட்சியகம், நீர்த்தர சோதனை ஆய்வுக்கூடம் போன்ற இதர வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன.

மேலும், திருவள்ளூர் மாவட்டம் – மாதவரம், தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழக வளாகத்தில், தேசிய வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு வளர்ச்சி வங்கி நிதி உதவியுடன் 28,000 சதுரஅடியில், 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மீன்வளர்ப்பு தொழில் முனைவோருக்கான கல்வி மற்றும் பயிற்சி நிலையம் மற்றும் விடுதிக் கட்டடம்;

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் கீழ் தஞ்சாவூர் மாவட்டம், சூரக்கோட்டையில் இயங்கி வரும் வளங்குன்றா நீருயிரி வளர்ப்பு மையத்தில்,

தேசிய வேளாண் வளர்ச்சி திட்ட நிதியுதவியுடன், 3,800 சதுரஅடியில், 60 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், காவேரி டெல்டா பகுதியிலுள்ள மீன் பண்ணையாளர்களுக்கு உதவும் வகையில் கட்டப்பட்டுள்ள நீர்த்தர சோதனை ஆய்வகக்கூடம்;

சென்னை, நந்தனத்தில் 1,12,000 சதுரஅடி பரப்பளவில் தரை மற்றும் 9 தளங்களுடன், பால்வளத்துறை இயக்குநர் அலுவலகம், தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையம் (ஆவின்) தலைமை அலுவலகம், பால் கூட்டுறவு தணிக்கை இயக்குநர் அலுவலகம் ஆகிய அலுவலகங்களை ஒருங்கிணைத்து 36 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பால்வளத் துறை அலுவலக வளாகம்;

காஞ்சிபுரம் மாவட்டம் – சோழிங்கநல்லூர் பால் பண்ணை வளாகம், திருவள்ளூர் மாவட்டம் – அம்பத்தூர் பால் பண்ணை வளாகம், சென்னை – அண்ணா நகர் வசந்தம் குடியிருப்பு ஆகிய இடங்களில் 2 கோடியே 81 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள அதிநவீன ஆவின் பாலகங்கள்;

என மொத்தம் 57 கோடியே 41 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள மீன்வளத்துறை மற்றும் பால்வளத்துறை கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மீன்வளம், பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தத் துறை அமைச்சர் திரு. டி. ஜெயக்குமார், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் திரு.ஒ.எஸ். மணியன், மாண்புமிகு பால்வளத்துறை அமைச்சர் திரு.கே.டி. ராஜேந்திரபாலாஜி, தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் தலைவர் திரு.அ.மில்லர், கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், இ.ஆ.ப., தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்தின் நிர்வாக இயக்குநர் திரு.சி. காமராஜ், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**
**நாள்: 21.6.2018**